24 மணி நேர
தொலைத்தொடர்பு
சேவைகளுக்கு
நம்பிக்கையான இடம்:
மிதுஷா
புதிய பஸ் நிலைய
கட்டடம்,
வவுனியா.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

முகவர் தபால்
தொலைத்தொடர்புகளுக்கு
நம்பிக்கையான
ஒரே இடம்:
மிதுஷா
ரயில் நிலைய வீதி,
வவுனியா.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 16 திங்கட்கிழமை (28 - 02 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 93

ஆண்டு 9,10,11 ஆகிய வகுப்புகளுக்கான

## பாடங்களை மாற்றும் முடிவு: கல்வி அமைச்சு ஒத்திவைப்பு?

யாழ்ப்பாணம், பெப். 28

இடைநிலை வகுப்புகளான ஆண்டு 9, 10, 12 இற்குப் போதிக்கப்படும் பாடங்களில் திடீர் மாற்றம் கொண்டுவர எடுக்கப்பட்ட முடிவை கல்வி அமைச்சு தள்ளிப் போட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் திடீர் மாற்றம் தொடர்பாக பல்வேறு மட்டங்களில் எதிர்ப்புக் கிளம்பியிருப்பதை அடுத்தே மேற்படி திட்டத்தைத் தள்ளிப் போடுவதற்கு முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் — இந்தப் பாடமாற்றங்கள் குறித்து பிரபல பாடசாலைகள் மற்றும் கல்விமான்களின் கருத்தைக் கேட்டறியவும் —

அதன் பின்னர் இறுதி முடிவு எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

அனேகமாக உத்தேச பாட மாற்றத் திட்டம் கைவிடப்படலாம் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

எனினும் மேற்படி வகுப்புகளுக்கு வரலாறு ஒரு பாடமாகப் போதிக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில் —

1996 ஆம் ஆண்டிலிருந்து புதிய பாடத்திட்டம் ஒன்றை கொண்டுவர கல்வி அமைச்சின் உயர்மட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் —

1996 இல் ஆண்டு 6 மற்றும் ஆண்டு 9 ஆகிய வகுப்புகளில் புதுத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் —

பின்னர் அடுத்த ஆண்டுகளில் ஒவ்வொரு வகுப்பாக அது விஸ்தரிக்கப்படும் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ-3)

### முச்சந்தி முரளி



டி. பி. எண்ட சாடிக்கு ஏற்ற மூடிதான் உவர் ரணில்......!

இளாலி, ஆலங்கேணி பகுதியில்

## சனி இரவு புக்காரா தாக்குதல்!

### 30 பேரைக் காணவில்லை என அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

இளாலிக் கடலேரியில் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகள் மீது "புக்காரா" விமானம் சனிக்கிழமை இரவு நடத்திய குண்டு வீச்சில் 30 பேரைக் காணவில்லை என்றும் —

அவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் —

உயிர்தப்பிக் கரை சேர்ந்த பயணிகளை மேற்கோள் காட்டி பி.பி.ஸி மற்றும் வெரித்தாஸ் வானொலி சேவைகள் தகவல் வெளியிட்டன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பொதுமக்கள் சுமார் 70 படகுகளில் பயணம் செய்ததாகவும் —

அவ்வேளையிலேயே "புக்காரா" விமானம் குண்டு வீச்சை நடத்தியதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன 600 முதல் 700 பயணிகள் தமது பயணத்தை மேற்கொண்டிருந்த வேளை இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பூநகரி - நாகதேவன்துறை கடற்படை முகாமை புலிகள் அழித்த பின்னர் நடந்த முதலாவது தாக்குதல் இதுவாகும்.

இளாலிப் பாதையில் மீண்டும் மரணங்கள், ஆபத்துகள் திரும்பி விட்டன. கடந்த மூன்று மாதங்களாக மக்கள் பாதுகாப்பாகத் தமது பயணத்தை மேற்கொண்டு வந்தனர் — என்றும் தெரிவிக்கப்பட்டது.

படகில் இருந்தவர்கள் கூச்சலிட்டதாகவும், சிலர் படகுகளில் இருந்து வாவிக்குள் குதித்ததாகவும், சிலர் தத்தமது குல தெய்வங்களைப் பிரார்த்தனை செய்ததாகவும் சம்பவத்தின் போது உயிர்தப்பி வவுனியா சேர்ந்த பயணி ஒருவர் கூறியதாக பி.பி.ஸி. குறிப்பிட்டது.

படகுகள் கரை சேருவதற்கு முன்பாக ஹெலிக்கொப்டரில் இருந்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் பத்துப் பேர் காயமடைந்தனர் என்று பயணிகள் கூறியதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

சனிக்கிழமை இரவு 9 30 மணி முதல் 10 மணி வரை 'புக்காரா' விமானம் பளை, கிளாலிப் பகுதிகளை வட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஸ்ரீலங்கா அரசாங்கம் பொய்யான மகஜர்!

## மாநாட்டில் பங்குபற்றும் பிரபல சட்டத்தரணி தகவல்

கொழும்பு, பெப்ரவரி 28

ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐ. நா. மனித உரிமைகள் மாநாட்டில் ஸ்ரீலங்கா அரசு சமர்ப்பித்துள்ள அறிக்கை பல பொய்யான விடயங்களைக் கொண்டிருக்கிறது, ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் மறைக்கப்பட்டுள்ளன,

— இவ்வாறு அந்த மாநாட்டில் பங்குபற்றிவரும் பிரபல மனித உரிமைகள் வாதியும் சட்ட அறிஞருமான பிரின்ஸ் குணசேகரா குற்றம் சுமத்தியிருக்கிறார்,

ஸ்ரீலங்காவில் மனித உரிமைகளைக் கண்காணிக்கும் — வெளிநாட்டில் வதியும் சட்டத்தரணிகளின் — சங்கம் லண்டனில் அமைந்துள்ளது.

இந்தச் சங்கத்தின் பிரதிநிதியாக மேற்படி சர்வதேச மாநாட்டில் அவர் பங்குபற்றி வருகிறார்.

ஸ்ரீலங்கா அரசின் சார்பில் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், சட்டமா அதிபர் திலக் மாரப்பான ஆகியோர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை வாக்களிப்பு

## கிழக்கிலும் வவுனியாவிலும் தேர்தலை ஒட்டிப் பதற்றம்!

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் நாளை நடைபெறவுள்ள தேர்தல்களை ஒட்டி அந்தப் பிரதேசங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று முதல் மேலும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பல இடங்களில் பதற்றம் நிலவுவதாகத் தெரிய வருகிறது.

திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும், வவுனியா நகரப்பகுதியிலும் இராணுவ நிலைகள் உஷார் நிலைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் —

விடுதலைப் புலிகள் ஊடுருவக் கூடும் எனச் சந்தேகிக்கப்படும் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் கிழக்கு மாகாண இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல இடங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் முழு அளவில் இடம்பெற்று வருகின்றன.

வீதிகளில் போவோரும் வருவோரும் துருவித் துருவி சோதனையிடப்படுகின்றனர். வாகனங்களும் பல இடங்களிலும் நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுகின்றன. (உ-17-5)

## தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்துக்குத் தடை!

கொழும்பு, பெப். 28

வவுனியா நகரசபைத் தேர்தலை ஒட்டி இன்றும் நாளை முதலாம் திகதியும் தாண்டிக்குளம் ஊடாகப் பயணம் செய்வதற்குப் பொலீஸார் தடைவிதித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

நகரசபைத் தேர்தலுக்கான பாதுகாப்பு முன்னேற்பாடாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் —

தேர்தல் முடிந்த பின்னர் தாண்டிக் குளம் ஊடாக வழமைபோல் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

தேர்தலை முன்னிட்டு வவுனியாவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை படையினர் மேற் கொண்டு வருவதாகவும் —

இதனால் வவுனியாவில் பதற்றம் நிலவுவதாகவும் அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார். (உ-3 5-17)

## 7,500 பரல் ம.எண்ணெய் நாளை இங்கு வந்துசேரும்

யாழ்ப்பாணம், பெப் 28

ஏழாயிரத்து 500 பரல் மண்ணெண்ணெயுடன் 'மாஹோ' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரவிருப்பதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இக்கப்பல் கொழும்பில் இருந்து வடக்கு நோக்கி புறப்பட்டதாகவும்—

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்ததும் பொருள் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்றும் — தெரிவிக்கப்பட்டது

அதே வேளை — திருகோணமலையில் மாவை ஏற்றிக்கொண்டு 'ஹெந்தல' கப்பல் இன்று மாலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் —

நாளை காலை மா இறக்கும் வேலைகள் நடைபெறும் எனவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### கலைப்பீடத்தில்

## துறைத் தலைவர் பதவி: பேராசிரியர் ராஜினாமா?

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் கீழ் இயங்கும் துறை ஒன்றின் தலைவரான பேராசிரியர் ஒருவர் துறைத் தலைவர் பதவியை இன்று இராஜினாமாச் செய்ய இருப்பதாகத் தெரிய வருகிறது.

தமது துறையின் கீழ் பயிலும் மாணவர்களுக்கு இரு பாடங்களைப் போதிப்பதற்கான விரிவுரையாளர் பதவிகளுக்கு விளம்பரம் செய்து, அதனடிப்படையில் நேர்முகப் பரீட்சைகளை நடத்தி தெரிவுக்குழுவினால் அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதாகவும் —

அதன் பின்னர் பல்கலைக்கழக கவுன்ஸில் புதிதாக வயது எல்லை என்ற ஒரு காரணத்தைப் புகுத்தி அந்தத் தெரிவை நிராகரித்ததாகவும் —

அதனை ஆட்சேபித்தே துறைத் தலைவர் பதவியைத் தாம் இராஜினாமாச் செய்வதாகவும் —

அந்தப் பேராசிரியர் குறிப்பிட்டதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## பளையை நோக்கி கடும் ஷெல் வீச்சு!

தென்மராட்சி, பெப். 28

நீண்டநாள் இடைவெளியின் யாழ்தேவி நடவடிக்கையின் பின்னர் சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பளைப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

பளை—புலோப்பளை வீதிப் பகுதியில் அடுத்தடுத்து ஷெல்கள் வீழ்ந்தன.

அதனால் ஆலை ஒன்றுக்கு அருகில் வீட்டின் பின்பக்கத்தில் வீழ்ந்த ஷெல்லினால் அந்த வீடு சேதமடைந்தது. வளவில் நின்ற பயன்தருமரங்கள் பல முறிந்தன. வீட்டு முற்றத்தில் இரு பெண்கள் கதைத்துக் கொண்டிருந்த போதிலும் தெய்வாதீனமாக காயம் ஏதும் இன்றித்தப்பினர்.

மேலும் சில ஷெல்கள் புலோப்பளையில் தவறணை ஒன்றுக்கு அருகிலும் தோட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. தூதரக அதிகாரிகள் நேற்று புலிகளுடன் பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ். வந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் நேற்றுக் காலை 10 மணியளவில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினர்.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மேற்கொள்ளவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்து தூதரக அதிகாரிகள் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

குடிசைகள் அமைத்தல், சுகாதார வசதிகள், மடு அகதிமுகாம் உணவுப் பிரச்சினை போன்ற விடயங்கள் குறித்து பேச்சில் ஆராயப்பட்டது.

நேற்றைய பேச்சுக்கள் பயனுள்ள வகையில் அமைந்ததாக ஐ.நா. தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் இங்கிருந்து இன்று கொழும்பு திரும்பவுள்ளனர்.

### தமிழகத்திலிருந்து திரும்பும்

## அகதிகளை குடாநாட்டில் குடியேற்றுவது பற்றி பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 28

தமிழகத்தில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பும் அகதிகளை மீளக்குடியேற்றுவது தொடர்பாக யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் நேற்றுப்பகல் யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரைச் சந்தித்து அவருடன் பேச்சு நடத்தினர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதிகளின் நிலவரங்கள் மற்றும் யாழ். நிலைமை குறித்தும் அவர்கள் கேட்டறிந்தனர்.

ஐ. நா. அதிகாரிகள் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் அலுவலக அதிகாரி திரு. செற்றிக் பிரலாவையும் சந்தித்து யாழ் நிலைமைகளை கேட்டறிந்தனர். (உ-3)

## வட்டமிட்ட புக்காரா

நேற்றுக் காலை 11.30 மணியளவில் அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியை புக்காரா விமானம் ஒன்று வட்டமிட்டுச் சென்றது. (உ-17)

# பாரம்பரிய தாயகம் என்ற கோட்பாட்டை ஐ. தே. க. ஏற்கவில்லை என்கிறார் ரணில்

## டி.பியின் தற்போதைய பேச்சுக்கள் குறித்து விளக்குகிறார் பிரதமர்

கொழும்பு, பெப். 28

பாரம்பரிய தாயகம் என்பதை எந்தச் சந்தர்ப்பத்திலும் கோட்பாடு ரீதியாக ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கவில்லை. இந்த நாட்டில் இன வேறுபாடு இன்றி எந்தப் பிரதேசத்திலும் எவரும் வாழலாம் என்பதே எமது அடிப்படைக் கருத்து.

— இவ்வாறு கூறியிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா. கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நீண்ட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இனப்பிரச்சினை குறித்து அண்மைக்காலத்தில் பொது இடங்களில் நிகழ்த்தி வரும் உரைகள் குறித்து இந்தப் பேட்டியில் பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு:-

கேள்வி:- பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்தே உள்ளன என்று அரசு திரும்பத் திரும்பக் கூறிவரும் நிலையில் அரச தரப்பில் இது தொடர்பான முன்னேற்பாடான முயற்சிகள் ஏற்படுவதற்குரிய தருணம் தோன்றியுள்ளது என நீங்கள் கருதுகிறீர்களா?

பிரதமர்:- அண்மைக்காலத்தில் பல்வேறு கருத்துக்களும், முரண்பாடுகளும் தோன்றியுள்ளன அரசு கடந்த சில மாதங்களில் தெரிவித்த கருத்துகளுக்கான பதில் பிரபாகரனிடமிருந்தே வரவேண்டும். பிரபாகரன் பேச்சுவார்த்தை பற்றி என்ன கருத்தைக் கொண்டுள்ளார் என்பதிலேயே சகல முயற்சிகளும் தங்கியுள்ளன.

பாலசிங்கமும், கரிகாலனும் கூறுபவற்றை நாம் எந்தளவில் புலிகளின் நிலைப்பாடாகக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு மாத பிறவுண் பேட்டுக் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஆஷா கோழிப் பண்ணை, ஓராம்கட்டை, பிரதானவீதி, பருத்தித்துறை. [29648]

தேநீர்க்கடை பாவனைக்குரிய கண்ணாடி அலுமாரியும், தேக்கு அலுமாரி ஒன்றும் வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. 286, நாவலர் வீதி கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அருகில், யாழ்ப்பாணம். (29651)

### மணவறை விற்பனைக்கு

விரும்பிய தரத்தில் மணவறை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: S K பாலசுப்பிரமணியம் "கௌரீ வாசா", முரளி வீதி, ஆவரங்கால்மேற்கு, ஆவரங்கால். (29617)

### மணிக்கூடு திருத்தவேலை

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன், திருத்திக் கொடுக்கப்படும். நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம் இணை கண்டி வீதி. சாவகச்சேரி. (சி/7215)

### நூலகர்களே!

உங்கள் நூலகங்களுக்குத் தேவையான மிகச் சிறந்த புத்தகங்களைத் தெரிவு செய்திட உடனே வாரீர். ஆனந்த்ஸ் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6988)

### சாதகக் குறிப்பு

நோர்வே, சிங்கப்பூர், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கு சாதகக் குறிப்பு உடனே எழுதிக் கொள்ளலாம். சிவா, இல 712, நாவலர் வீதி, அரியாலை. (29668)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தேவைப்படும் அறிவு மட்டம் வரை தனிப்பட்ட முறையிலும் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு: சனி, ஞாயிறு காலை 8-00 — 10-00 மணிக்குள் 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (6999)

### கோழிக்குஞ்சு விற்பனை

Christombu Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29638)

## பேராயரை கௌரவித்து நூல் வெளியீடு

இளைப்பாறிய பேராயர் டி. ஜே. அம்பலவாணரின் சேவைகளைக் கௌரவிக்கும் கட்டுரைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பேராயர் குலேந்திரன் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடைபெறும் விழாவில் அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல், பேராசிரியர் கா. சிவத்தம்பி, கட்பவாரிதி இ. ஜெயராஜ், அருட்திரு. எஸ். ஜெயநேசன், விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா, பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். (க-161)

## மக்கள் வங்கி - எழுதுவினைஞர்

போட்டிப்பரீட்சைக்கான

## விசேட துரித பயிற்சி வகுப்புகள்

**ஆரம்பம்: இன்று காலை 9-00 மணி**

பாடநெறி:- பொதுவிவேகம், மொழித்திறன்

- ★ திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில்
- ★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
- ★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
- ★ கட்டணம் ரூபா 250/- (முழுப்பயிற்சிக்கும்)

போட்டிப்பரீட்சையில் வெற்றிபெற அரியவாய்ப்பு

**அஸ்ரன் கல்வி நிலையம்**

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கிக்கு அருகில்)

(சி/7421)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 09 — 1902

மறைவு: 19 — 02 — 1984

### அமரர் கந்தையா சிதம்பரப்பிள்ளை

(இளைப்பாறிய P. W. D. பிரதம உத்தியோகத்தர்)

திதி: 28-02-1994

அன்புடனும், பாசத்துடனும் எங்களை சிறப்பாக வாழவைத்த அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து பத்து ஆண்டுகள் சென்றாலும், உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல திருக்கேதீச்சரப் பெருமானை வேண்டுகின்றோம்.

அன்பு மிகு:
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்

மணியர் வளவு,
சுழிபுரம். (29609)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 20 — 02 — 1918

உதிர்வு: 29 — 01 — 1994

### அமரர் தம்பு சின்னத்துரை

(துரையர் - மருதனார்மடம்)

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டும், எமக்கு பல வழிகளிலும் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஞானவைரவர் அருள்பாலிப்பாராக.

மனைவி, மகள்,
சகோதரர்கள், மைத்துனிமார்,
பெறாமக்கள்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில், சுன்னாகம். (7015)

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்
கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சி நெறி - 1994

## விண்ணப்பம் கோரல்

மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் இல. 14, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் கோரப்படுகின்றது. விண்ணப்பப் படிவங்களை ரூபா 10/- செலுத்தி கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **10-03-1994**

(சி-7282) — அதிபர்

## உபநயன அழைப்பு

அன்புடையீர்!

பிரம்மஸ்ரீ இ. சபேசக்குருக்கள்
தம்பதிகளின் புத்திரன்

### பிரணவ தர்ஷசர்மா

அவர்களுக்கு

பசுபதீஸ்வர ஆலயத்தில் 02-03-1994 புதன்கிழமை காலை 9 மணிக்கு உபநயனம் நடைபெற திருவருள் கூடியிருப்பதால், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- இ. சபேசக்குருக்கள் தம்பதிகள்.

'குருக்கள் இல்லம்',
பருத்தித்துறை [29581]

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ், மாவட்டம்

எதிர்வரும் புதன்கிழமை 02-03-1994 பிற்பகல் 3-00 மணிக்கு யாழ் மாவட்ட பொதுச்சபைக் கூட்டமும் பிற்பகல் 4-00 மணிக்கு யாழ். கோட்ட பொதுச்சபைக் கூட்டமும் எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும். யாழ் கோட்ட நிர்வாக சபை தெரிவு நடைபெற இருப்பதால் சகல உறுப்பினர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
(சி/7285) யாழ். மாவட்டம்.

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்" (வெளி: 14:13)

### திருமதி தியோடு பேர்னபேத்

அவர்கள்
திருநாடு அலங்கரித்த

## நன்றி துதி ஆராதனை

இன்று (28-02-1994) மாலை 3 மணிக்கு எபனேசர் ஜெப நிலையம் வட்டுக்கோட்டையில் நடைபெறும் இவ்வாராதனையில் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.

சபை - தலைமைப் போதகர்,
[7101] உதவிப் போதகர்

## கண்ணீர் பூக்கள்

நீரில் மறைந்துவிட்ட நண்பன்

### தெய்வேந்திரன் ரவீந்திரனுக்கு

எமது கண்ணீர்ப் பூக்களை சமர்ப்பிப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சக மாணவர்கள்,
H N D A III (English)
(29670) யா/தொழில்நுட்பக் கல்லூரி.

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 05 — 02 — 1966

மறைவு: 28 — 02 — 1988

### செல்வன் துரைசிங்கம் சுதிகரன்

நினையாத நேரம் அணைந்த குல விளக்கே!
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ அண்ணா எம் உள்ளம்
மீண்டும் வரும் நினைவால் உருகுதே எம்மனம்
எந்நாளும் உங்களை எண்ணுகிறதே
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்ட அன்பு அண்ணாவே!
உன் ஆத்மா சாந்தியடைய என்றும் -
பிரார்த்திப்போம்.

உன் நினைவுடன்!
அன்பு அப்பா, அம்மா, சகோதரர்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(29671)

வாருங்கள்! பாருங்கள்!

## பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக நிதி அன்பளிப்பு காட்சி

"கண்ணகை வழக்குரை" புகழ்

செல்லையா - மெற்றாஸ்மயில் நெறியாள்கையில்

# ★ காத்தவராயன் ★

## 'சிந்து நடை மரபுவழிக் கூத்து'

யாழ் / புனித மரியாள் வித்தியாலய மாணவர்களான பிரபல பாடகர் சாந்தனின் புதல்வர்கள் மோகன்ராஜ், பிரபுராஜ் உட்பட அக்கல்லூரி மாணவர்களின் சிறந்த நடிப்பில் உருவான வெற்றிப்படைப்பு

※ நிகழ்வு I
இடம்: **யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபம்**
காலம்: **06-03-1994 ஞாயிற்றுக்கிழமை**
பிற்பகல் 3 — 6 மணி வரை
**அன்பளிப்பு: 100/-, 50/-, 25/-**

※ நிகழ்வு II
இடம்: **யாழ். கனகரத்தினம் ம. ம. வி.**
காலம்: **12-03-1994 சனிக்கிழமை**
இரவு 8 — 11 மணி வரை
**அன்பளிப்பு: 100/-, 50/-, 25/-, 15/-**

★ ரிக்கட் பெறுமிடம்: பேபி போட்டோ படப்பிடிப்பாளர், திருநெல்வேலி, பலாலி றோட்

அனைவரையும் அழைக்கிறோம்

கழக முக்கிய நோக்கங்கள்:

- ★ மாணவர்கள் மூலம் பாரம்பரிய கலைகளை மேம்படுத்தல்
- ★ மாணவர்களுக்கு, கலைகளில் வித்துவமுடைய அண்ணாவிமார்களையும், மரபுவழி நாடக, கூத்து இசைப்பாடகர்களையும் தெரிந்து எடுத்து. அவர்களுக்கு குறிப்பிட்ட சம்பளம் வழங்கி இச் சேவையில் ஈடுபடுத்தல்.
- ★ நாட்டார் பாடல்களின் இசைகளை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து நாட்டார் இசைகளைப் பாதுகாத்தல்.
- ★ அண்ணாவிமார் பரம்பரைக்கு கௌரவமளித்து மறைந்து வரும் தமிழர்களின் பாரம்பரிய கலைகளுக்கு புத்தூக்கம் அளித்தல்.
- ★ எழுதா மரபுவழி இலக்கியங்களை நூலுருவில் கொண்டுவருதல்.
- ★ பாரம்பரிய கலைகளில் கூத்து ஆட்டம் இசை நாடக இசை கூத்துப் பாடல்களின் இசை என்பவற்றை முக்கியமாக மாணவர்களிடம் புகுத்தல்.
- ★ நாட்டுப்புற இசைக் கருவிகளை நவீன யுக்தியுடன் மேடைக்கு கொண்டு வந்து மக்களின் செல்வாக்கைப் பெறுதல்.
- ★ பாரம்பரிய கலைகளில் வித்துவமுடையவர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கி அவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளுதல்.

மேற்படி கழகத்தில் கலைஞர்களையும், ஆர்வலர்களையும் அங்கத்தவர்களாகச் சேரும் வண்ணம் அழைக்கின்றோம். விண்ணப்பப் பத்திரத்தை 10/- ரூபா செலுத்தி 365, கோயில் வீதி, நல்லூரில் தினமும் மாலை 4-30 மணிக்குப் பின் பெற்றுக் கொள்ளலாம்.

கழக காப்பாளர்கள்:

- ● திரு. க. சொக்கலிங்கம் எம். ஏ. (சொக்கன்)
- ● திரு. சி. மகேந்திரன், விரிவுரையாளர், நுண்கலைப் பிரிவு யாழ். பல்கலைக்கழகம்.
- ● திரு. சி. தார்சீசியஸ், அதிபர், புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

செ. மெற்றாஸ்மயில்,
செயலாளர்,
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:
**அண்ணா தொழிலகம்**
இணுவில்.

**பேபி போட்டோ**
படப்பிடிப்பாளர்
திருநெல்வேலி,
பலாலி றோட்

**ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ**
13 - 14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்
(சி-7286)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இதுவும் தந்திரமோ?

வடக்கு - கிழக்குப் பகுதிக் கடலில் தொழில் செய்வதற்கும் பயணம் செய்வதற்கும் விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு அரசு முடிவு செய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அதாவது மன்னார் தொடக்கம் திருகோணமலை வரையான கடற்பகுதியில் நடைமுறையில் இருக்கும் கடல் வலயத் தடைச்சட்டம் நாளை முதலாம் திகதி தொடக்கம் நீக்கப்படவிருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் இது சம்பந்தமான சரியான, தெளிவான விவரம் வெளியிடப்படவில்லை.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை உள்ளடக்கிய தமிழீழம், கடற்பரப்பு மிகவும் நிறைந்த பகுதியாகும். கடல் வளமும் இங்கு அதிகம். அதன் காரணமாக இலங்கை நாடு முழுவதினதும் கடல் வளப் பொருள்களின் தேவையில் கணிசமான அளவை வடக்கு - கிழக்கு மக்களே உற்பத்தி செய்தார்கள்.

யுத்தம் தொடங்கிய 1990 ஆம் ஆண்டில் கூட, கடல் வலயத் தடைச் சட்டத்தின் மத்தியிலும், ஸ்ரீலங்காப் படைகளின் கெடுபிடிகளின் மத்தியிலும், பெறப்பட்ட மீன் வகைகள் மட்டும் 51 ஆயிரத்து 996 மெற்றிக் தொன்னாக இருந்தது. இது 1983இல் பெறப்பட்ட மீன் வகைகளின் சரி அரைவாசியாக இருந்தது. ஆனால் 1993ஆம் ஆண்டில் பிடிக்கப்பட்ட மீன் இனங்களின் அளவு 1990இல் பெறப்பட்டதிலிருந்து அரைவாசியாகியது. அதாவது மீன் உற்பத்தி மட்டும் பத்து வருடங்களில் கால்வாசியாக வீழ்ச்சி கண்டு விட்டது!

கடல் வலயத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னரே—

தொழிலாளர்கள் கடற்பிராந்தியத்தில் தமது தொழிலைச் செய்வதற்கு ஸ்ரீலங்காவின் முப்படையினரும் முட்டுக்கட்டையாக இருந்து குந்தகம் விளைவித்தனர்; இப்போதும் விளைவிக்கின்றனர். மீனவர்கள் நிம்மதியாகத் தொழில் செய்ய முடியாதவாறு அவர்களைத் தாக்குவதும், கொல்வதும், அவர்களின் தொழில் உபகரணங்களைச் சேதப்படுத்துவதும் வடக்கு - கிழக்கு கடற்பிராந்தியத்தில் நாளாந்த அடாவடித்தனங்களாக இருந்தன.

போரின் வேகம் கூடக்கூட படையினரின் அட்டகாசங்களும் அதிகரித்தன. அதனால் லட்சக்கணக்கான கடற்றொழிலாளர்கள் தமது தொழிலைக் கைவிட்டு, நாளாந்த ஜீவனோபாயத்தை இழந்து நிர்க்கதிக்குள்ளானார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக கடல்வலயத் தடைச் சட்டம் கடற்றொழிலாளர்களையும், அவர்களின் குடும்பங்களையும் அநாதைகளாக்கியது.

தமிழனுக்கு தனது சொந்தக் கடற்பிராந்தியத்தில் பாதுகாப்பு இல்லை என்ற நிலையில் கடற்றொழில் முற்றாக முடங்கிப் போயிற்று.

கடல் வலயத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் தமிழீழ கடற்றொழிலாளர்கள் பாதுகாப்புடனும் நிம்மதியாகவும் தமது தொழிலைச் செய்யக்கூடிய சாதக நிலை உருவாகுமா என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொழிலிழந்த மீனவருக்கு வழங்கப்படும் நிவாரணத்தை நிறுத்துவதற்காக, அந்தப் பணத்தை போர்ச் செலவுக்கு மாற்றும் நோக்குடன் கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கூறிக்கொண்டு, தமிழீழக் கடற்றொழிலாளர்களை ஸ்ரீலங்கா படையினர் துன்புறுத்தமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

கச்சதீவுக்கு வரும் தமிழக மீனவர்கள் சம்பந்தமாக இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையில் ஏற்பட்ட சிக்கல் நிலையை, முறுகல் நிலையை பெயரளவில் சமாளிப்பதற்காகக் கூட கடல்வலயத் தடைச் சட்டம் நீக்கப்படலாம்.

இவ்வாறன தந்திரங்களில் ஸ்ரீலங்கா அரசாங்கம் பெயர் பெற்றதல்லவா?

# காங்கேசன் சிமெந்து ஆலை விற்கும் முயற்சி தோல்வி

காங்கேசன்துறை சிமெந்து ஆலையை விற்க அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கம்பனிகளுக்கு விற்று அதன்மூலம் லாபம் பெறுவதற்காக அரசு கேள்விப் பத்திரங்களை கோரியிருந்தது.

எந்தக் கம்பனியும் கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்காததால், தனிப்பட்ட முறையிலும் ஆலையை விற்க அரசு முயற்சித்தது.

எனினும் தொழிற்சாலையை இயக்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கலைக் கருத்தில் கொண்டு எவரும் அதனை வாங்க முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சீனத் துணைப் பிரதமர் இன்று கொழும்பு விஜயம்

கொழும்பு, பெப். 28

சீன வெளியுறவு அமைச்சரும் துணைப் பிரதமருமான கியாங் இச்சென் இன்று திங்கள் கொழும்புக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றார்.

அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை கொழும்பில் தங்கியிருக்கும் போது இவர், இலங்கை வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதுடன் இருதரப்பு உறவுகளை விருத்தி செய்வது பற்றி விரிவான பேச்சுக்களை நடத்துவார் என்றும்—

பின்னர் ஜனாதிபதி விஜேதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, சபாநாயகர் எம். எச். முஹம்மது ஆகியோரையும் சந்தித்துப் பேசுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் புதன்கிழமை சீன அமைச்சர் கொழும்பில் இருந்து மாலைதீவு பயணமாவார் என்று அறிவிக்கப்படுகிறது. (த எ)

## உலர் உணவு

தென்மராட்சி, பெப் 28

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான ஜனவரி மாத நிவாரண உலர் உணவுப் பொருள்கள் இன்று முதல் சங்க கிளைக் கடைகளில் வழங்கப்படவுள்ளது. (த-117)

## மத்திய கிழக்கு சமாதான பேச்சு:

# கிளின்ரனின் அழைப்பை யாஸீர் அரபாத் ஏற்றார்!

ஜெருசலம், பெப். 28

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்த வாஷிங்டன் வருமாறு அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்ரன் விடுத்த அழைப்பை பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாஸீர் அரபாத் ஏற்றுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது

மேற்குக் கரைப்பிரதேசம்- ஹெப்ரோன் நகரில் பள்ளிவாசல் ஒன்றில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த அரபுக்கள் மீது யூத குடியிருப்பாளர் ஒருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 50க்கு அதிகமான பலஸ்தீனியர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து சமாதானப் பேச்சுகள் முறிந்து விடுமோ என்ற நிலையில் திரு. கிளின்ரன் இந்த அழைப்பை விடுத்தார்.

இதனிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றி வரும் பலஸ்தீன விடுதலை இயக்க ஆலோசகர்களுடன் அரபாத் இப்போது கலந்தாலோசனை நடத்தி வருகின்றார் என்று அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை — கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரேலினால் குடியமர்த்தப்பட்டுள்ள யூதர்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று அரபாத் விடுத்த கோரிக்கையை இஸ்ரேலிய அமைச்சரவை நிராகரித்து விட்டது

காஸா மற்றும் மேற்குக் கரைப்பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனியர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதை உறுதிப்படுத்த சர்வதேசக் கண்காணிப்புக்குழு இன்று இப்பிரதேசங்களில் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அரபாத் ஐ. நா. பாதுகாப்புச் சபையை கேட்டுள்ளார்.

இவற்றுக்கு மத்தியில் — ஹெப்ரோன் படுகொலையை கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றக்கூடிய ஐ. நா. பாதுகாப்புச் சபை அது பற்றிய ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தனது அமர்வை இன்று (திங்கள்) வரை ஒத்தி வைத்துள்ளது

## நாட்டின் அபிவிருத்திக்கு தடை பயங்கரவாதமாம்!

### ஜனாதிபதி சொல்கிறார்

பயங்கரவாதம் நாட்டின் அபிவிருத்திக்கு மிகப்பெரும் தடையாக விளங்குகிறது

ஜனாதிபதி விஜேதுங்கா இவ்வாறு கூறினார்.

கண்டி புனித அந்தோனியார் மகளிர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு சொன்னார்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய அவர் மேலும் கூறியதாவது;

பயங்கரவாத பிரச்சினை காரணமாக நாட்டிற்கு வருடம் தோறும் 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகைப் பணம் செலவாகிறது. பிரச்சினைக்கு தீர்வுகண்டு இந்த வீண்விரயத்திற்கு முடிவு கட்ட சகல நடவடிக்கைகளையும் எடுக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

2 ஆயிரமாம் ஆண்டிற்குள் புதிய தொழில்மய நாடாக இலங்கையை மாற்ற வேண்டும் என்பது எமது நோக்கம். இந்த குறிக்கோளை அடைவதற்கு வெளிநாட்டு முதலீடு அவசியம் என்றார் (த 9)

## ஜேர்மன் வழங்கிய உதவிப் பொருள்கள்; பாதுகாப்பு இணைப்புக் குழு மீண்டும் அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், பெப் 28

ஜேர்மன் சமஷ்டி குடியரசு வழங்கிய நிதியின் மூலம் அகதி முகாம்களை புனரமைக்க தேவையான சிமெந்து மற்றும் கட்டடப்பொருள்களை யாழ்ப்பாணம் எடுத்து வர பாதுகாப்பு இணைப்புக் குழு மீண்டும் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களை திருத்தி புனரமைக்க நிதி உதவி அளித்திருந்ததும் —

இந்த புனரமைப்பு வேலைகளுக்கு தேவையான கட்டடப் பொருள்களை எடுத்து வர பாதுகாப்பு இணைப்புக் குழு முன்னர் அனுமதி மறுத்திருந்ததும்—தெரிந்தவையே.

கடந்த வாரம் கொழும்பு சென்றிருந்த யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள், இப்பொருள்களை எடுத்துச் செல்ல முடியாததால் அகதி முகாம் புனரமைப்பு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்தனர்.

நிதி உதவி வழங்கிய ஜேர்மன் சமஷ்டி குடியரசு பிரதிநிதிகளுக்கும் விளக்கம் அளித்தனர்.

ஆனால் இந்தப் பொருள்களை எடுத்துச் செல்ல பாதுகாப்பு இணைப்புக்குழு அனுமதி மறுத்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — இந்த புனரமைப்பு வேலைகள் எதிர்வரும் மே மாதத்துடன் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்ற காலக்கெடுவை ஜேர்மன் சமஷ்டி குடியரசு விதித்துள்ளது. (த-3)

## திருட்டு

கோப்பாய் வட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக நீர்வேலி வாழைக்குலைச் சங்கக் கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்த 6 பரல் மண்ணெண்ணெய் கடந்த புதன்கிழமை இரவு திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தபால் ஊழியரின் சீருடை ஏப்ரலுக்கு முன் வந்து சேரும்

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ். மாவட்ட தபாலகங்களில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கான சீருடைத் துணிகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டிற்கு பின் தபாலக சிற்றூழியர்களின் கோல உடை இதுவரை அனுப்பி வைக்கப்படாமல் இருந்து வந்தது. அவற்றை இங்கு எடுத்து வருவதற்கு அண்மையில் கொழும்பு சென்ற யாழ் பிரதம தபாலதிபர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து தபால் திணைக்களத்தின் விநியோகத்திற்கு பொறுப்பான அத்தியட்சகர் இவற்றை இங்கு உடன் அனுப்பி வைப்பதாக உறுதியளித்துள்ளார். (த-162)

## நாளை

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பிரதான வீதி கேட்போர் கூடத்தில் நாளை திங்கள் மாலை 4 30 மணிக்கு பண்பாட்டுக் கருத்தரங்கம் நடைபெறும்

''கிறீஸ்தவ தமிழ் இலக்கியங்களில் தமிழர் பண்பாட்டு மயமாக்கல்'' என்னும் பொருளில் திரு. எஸ். தங்கராசா கருத்துரை நிகழ்த்துவார். (இ-51)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி வீதி பகவான் ஸ்ரீ சத்யசாயி பஜனை நிலையத்தின் 7ஆவது ஆண்டுவிழா நாளை திங்கட்கிழமை மாலை 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் அஷ்டோத்திரம் பஜனை நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

இராமநாதன் நுண்கலைப் பீடம் பண்ணிசைத்துறை தலைவர் சங்கீதபூஷணம் திரு. நா. வி. மு. நவரத்தினம் அவர்களின் ''இசையும் இறைவனும்'' என்னும் தலைப்பிலான விசேட சொற்பொழிவு மாலை 4.00 மணிக்கு இடம் பெறும். (க-89)

★ ★ ★

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு.வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் நல்லூர் கல்விக் கோட்டங்களின் பரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் பங்குபற்றுவார். (உ)

## வவுனியாவில் நீரில் மூழ்கி மாணவன் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 28

வவுனியாவில் இயங்கும் வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு கணக்கியல் மாணவனான தெய்வேந்திரம் ரவிந்திரன் (வயது 23) கடந்த சனியன்று வவுனியா இறம்பைக் குளத்தில் குளித்துக்கொண்டிருந்த சமயம் நீரில் மூழ்கி மரணமானார்.

ஈச்சமோட்டையை சேர்ந்த இம்மாணவனின் சடலம் நேற்று காலை கிளாலியூடாக எடுத்துவரப்பட்டது. (உ-17)

# பாரம்பரிய தாயகம் என்ற கோட்பாட்டை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள முடியும்? கடந்த காலங்களில் பிரபாகரனின் கருத்துக்களுக்கும் மற்றவர்களின் கருத்துக்களுக்கும் இடையே இருந்த முரண்பாடுதான் பிரச்சினையை தொடர வைத்துள்ளது.

பிரபாகரனிடமிருந்து புலிகளின் நிலைப்பாடு தெளிவாக வெளிப்படும் நிலையில், முன் நிபந்தனைகள் அற்ற பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலைகள் கூட தோன்றலாம்.

கேள்வி:- இதற்கு முன்னர் கடந்த காலங்களில் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்குழு முயற்சி பலவீனப்பட்டதும், அது வெளியிட்ட கருத்துக்கள் மர்மமான முறையில் அமுங்கிப் போனதும் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?, அரசு தெரிவுக் குழுவுக்கு எந்த வகையில் — தெளிவான முறையில் — தனது யோசனைகளைக் கொடுத்தது?

பிரதமர்:- தெரிவுக் குழு முயற்சி நடைபெற்ற போது தமிழ் கட்சிகள் அதில் பங்கு பற்றாது இடையில் ஒதுங்கிக் கொண்டதை நான் சரியான ஒன்றாகக் கருதவில்லை. இறுதி வரையில் அவர்கள் பங்கு பற்றித் தமது கருத்துகளை நிலைநிறுத்தி இருக்கலாம்.

அரசைப் பொறுத்தவரை பொது அடிப்படையிலான இணக்கங்களை எதிர்பார்த்திருந்தோம். அந்த நிலை தோன்றாமற் போனது துரதிர்ஷ்டவசமான ஒன்றாகும்.

### பேசுவதற்கு என்ன உள்ளது?

கேள்வி:- தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தைக்கான கதவு திறந்துள்ளது எனக் கூறிவருகின்றீர்கள். சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை சார்ந்தே இருக்க வேண்டும் எனவும், பெரும்பான்மையினரின் பாதுகாப்பில் இருக்க வேண்டும் எனவும் நாட்டின் அரசியலில் நிர்வாகத்தில் பங்குபற்ற அவர்களுக்கு உரிமை இல்லை எனவும் ஜனாதிபதி கூறிவரும் போது பேசுவதற்கு என்ன உள்ளது?

பிரதமர்:- ஜனாதிபதியின் பேச்சுக்கள் தவறான அர்த்தத்தில் நோக்கப்படுவதையே நான் மீண்டும் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

மரங்களில் செடி படர்வதும், செடிகளில் மரங்கள் தங்கியிருப்பதும் ஒரு பொதுவான எடுத்துக்காட்டு. இதை வைத்துக்கொண்டு தேசிய இனப்பிரச்சினையின் கதவை மூடக்கூடாது நான் ஜனநாயகத்திலும் பேச்சுவார்த்தையிலும் நம்பிக்கையுள்ளவன். பேசுவதற்கு நாம் தொடுக்கும் சமிக்ஞைகளை சரியான வகையில் பயன்படுத்தும் போது பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை தோன்றும். இதுதான் என்னுடைய அடிப்படையான நோக்கமாகும்.

கேள்வி:- அப்படியானால் பேச்சுவார்த்தைக்கான முன்நிபந்தனையாக, ஆயுதங்களைக் கையளித்தல், ஆனையிறவு பாதையை திறத்தல் போன்ற விடயங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன இந்த நிலையில் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என நம்புகிறீர்களா?

பிரதமர்:- ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேசிய சந்தர்ப்பத்தில் நிபந்தனை இல்லாமல் பேசப்பட்டது. அதிலும் கூட எந்தவிதமான முடிவும் ஏற்படவில்லை. இன்றைய நிலையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ''பிஸ்கட்'' வழங்கியோ, அல்லது செலவுத்தானங்கள் ஏற்படவோ பேசப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார் இன்றைய நிலையில் பிரபாகரன் தனது நிலைப்பாட்டை முன்வைப்பதுதான் அவசியமானது.

### சமஷ்டி குறித்து அரசின் நிலை என்ன?

கேள்வி:- விடுதலைப் புலிகள் ஈழத்துக்கு மாற்றீடாக சமஷ்டி முறை அல்லது மாநில சுயாட்சியை முன்வைத்துள்ளனர். இது பற்றிக் கருத்தும் தெரிவித்துள்ளனர். இதுபற்றி அரசின் நிலைப்பாடு என்ன?

பிரதமர்:- நாட்டின் ஒற்றையாட்சி முறைமையை மாற்றும்போது பொது இணக்கத்தின் அடிப்படையிலேயே எதனையும் செய்யமுடியும். பொது இணக்கத்தை ஏற்படுத்துவது அரசியல் கட்சிகளின் கருத்து ஒருமைப்பாட்டிலேயே தங்கியுள்ளது. எனவே புலிகளின் நிலைப்பாடு தெரியும் நிலையில்தான் நாம் ஒரு பொது இணக்கத்துக்கு வரமுடியும்.

கேள்வி:- சர்வதேச அரங்கில் பாலஸ்தீன — இஸ்ரேல் உடன்பாடு காணப்பட்ட போது முன்நிபந்தனை இல்லாமல் —இரகசியமான முறையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அந்த விதமான நிலைமையை இங்கு ஏன் ஏற்படுத்தக் கூடாது?

பிரதமர்:- இரகசியமாக மேற்கொள்ளும் விடயங்கள் பல சந்தேகங்களிலேயே முடிந்துள்ளன என்பதே கடந்தகால அனுபவமாகும். அவை தோல்வியையும் தழுவிக்கொண்டன. விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வருவது என்பது அவர்கள் ஜனநாயக வழிக்கு வந்த ஏனைய கட்சிகளை அங்கீகரிப்பதில் தங்கியுள்ளது அவர்களை மட்டும் தலைவர்களாகக் கருதி நாம் நடைமுறைகளைத் தொடரமுடியாது. நடைபெறும் தேர்தலில் புலிகளும் பங்குபற்றியிருக்கலாம். அவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் நாம் முன்நிபந்தனையை விதிக்கும் சூழ்நிலையே தோன்றியிருக்காது

கேள்வி:- கடந்தமாதத்தில் மத மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த மூன்று குழுக்கள் வடபகுதிக்கு விஜயம் செய்துள்ளன. அவர்கள் தமது விஜயம் தொடர்பாக ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியுள்ளனரா? மக்களின் கஷ்டத்தைப் போக்கவும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவுள்ளதா?

பிரதமர்:- மத அமைப்புகளோ, அரச சார்பற்ற அமைப்புகளோ பிரபாகரனை சந்தித்ததாகத் தெரியவில்லை எனவே அவர்கள் [illegible] வருவதற்குரிய எந்த விடயத்தையும் நாம் பெறவில்லை

பொதுமக்கள் கஷ்டங்களை நாம் தொடர்ச்சியாக அறிந்து அதற்கான நிவாரண ஒழுங்குகளை மேற்கொண்டே வருகின்றோம். நாம் முன்னர் குறிப்பிட்டது போல, பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட பல பொருள்களின் எண்ணிக்கையை நாம் குறைத்துள்ளோம்.

### பேச்சுவார்த்தை இடம்பெறுமா?

கேள்வி:- நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் முன்னர் விடுதலைப் புலிகளுடன் அரசியல் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறும் என எதிர்பார்க்கலாமா?

பிரதமர்:- இதற்குப் பதிலளிப்பது வெறும் எதிர்பார்ப்புக்களைக் கொண்டதாகத்தான் அமையும். ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலுக்குரிய காலவரையறை நிர்ணயிக்கப்பட்டுவிட்டது.

கேள்வி:- அண்மைக் காலத்தில் கிழக்குப் பகுதிகளில் கூடுதலான அபிவிருத்தித் திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகிறது. இது தேர்தலை நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் நடவடிக்கையா?

பிரதமர்:- நாம் கடந்த காலங்களில் நாடெங்கிலும் பரவலான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வந்துள்ளோம். அமைதியின்மை மற்றும் வன்முறைகளால் அது தடைப்பட்டது. இப்போது நாம் மேற்கொள்வது எமது தொடர்ச்சியான அபிவிருத்தித் திட்டமே தவிர வேறு எதுவும் இல்லை.

கேள்வி:- இலங்கையின் பெரும்பான்மை- சிறுபான்மை இனங்களை தனிமைப்படுத்தக் கூடிய விதமாக ஜனாதிபதி உரையாற்றி வருகிறார். பெரும்பான்மை இனத்தின் பாதுகாவலன் தாமே என்றும் கூறிவருகிறார். ஐக்கிய தேசிய கட்சி சிறுபான்மையினருக்குகளில் நீண்டகாலம் தங்கியிருக்கப் போவதில்லை என்பதுதான இதன் அர்த்தம்?

பிரதமர்:- ஜனாதிபதி அண்மைக் காலங்களில் அவ்வாறு பேசி வருவது சிறுபான்மையினரை தனிமைப்படுத்தும் நோக்குடன் அல்ல. அவர் பரந்த அடிப்படையில் கூறும் கருத்துகளை அர்த்தம் கொள்ளும் போக்கிலேயே யாவும் தங்கியுள்ளது. பதவியேற்ற பின்னர் ஜனாதிபதி பொது மக்கள் மத்தியில் பேசும் போது வெளிப்படுத்தும் கருத்து மக்கள் ஒன்றுபட வேண்டும் என்பதே இனப்பிரச்சினைக்கு அடிப்படையான ஒற்றுமையைக் காண்பதன் மூலம் தீர்வுகாண வேண்டும் என்ற நோக்குடனேயே அவர் அவ்வாறு கூறி வருகிறார்.

நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்கள் பிளவுபட்டிருப்பதன் காரணமாகவே பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண முடியாதுள்ளது சிறுபான்மையினர் பிளவுபட்டிருப்பதும், பெரும்பான்மையினர் பிளவுபட்டிருப்பதும் நாட்டின் அடிப்படை ஒருமைப்பாட்டை சிதைப்பதாக இருக்கக் கூடாது என்பது அவரது நம்பிக்கையாக இருக்க வேண்டும் என நினைக்கின்றேன்.

கேள்வி:- ஜனாதிபதி மக்களால் அல்லாமல், நாடாளுமன்றத்தின் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி கூறியுள்ளார். சிறுபான்மையினரின் செல்வாக்கை குறைக்கும் நோக்கத்தைக் கொண்டதே இத்திருத்தம் என்றும் அவர் கூறியுள்ளார். இந்த அரசமைப்பு மாற்றத்துக்கு நீங்கள் இணங்குகின்றீர்களா, ஏன்?

பிரதமர்:- ஜனாதிபதி தெரிவு தொடர்பான அரசியல் அமைப்புத் திருத்தம் பற்றிப் பல்வேறு விதமான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி பிரேமதாஸாவின் மறைவின் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகக் கருதப்பட்டது.

ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா பதவியேற்ற பின்னர் சிறுபான்மையினர் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வருகிறார் பெரும்பான்மை சிறுபான்மை என்ற வேறுபாடுகள் ஏற்படாத வகையில் இனங்கள் ஒன்றுபடுவதும், அதற்கேற்ற அரசமைப்பு உருவாக்குவதும் தான் இன்றைய சூழ்நிலையில் அவசியமாவது.

ஜனாதிபதி விஜேதுங்கா, பிரேமதாஸாவைப் போல் பிரபல பேச்சாளர் அல்ல அவர் சிறு சிறு கூட்டங்களிலேயே பேசி வருகிறார். அவர் சிங்கள மக்கள் மத்தியில் பேசுவதை, சிறுபான்மையினரை ஒதுக்குவதாகத் திரித்து நோக்குவது பொருத்தமானதல்ல.

ஸ்ரீ. ல. சு. கட்சியினரும் ஜனாதிபதித் தெரிவை மாற்றுவது பற்றி கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கேள்வி:- ஜனாதிபதித் தெரிவு இலங்கை முழுவதையும் ஒரு தொகுதியாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவது. ஜனாதிபதி பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமல்ல, அனைத்து இலங்கை மக்களுக்கும் ஜனாதிபதி ஆவார். இந்த நிலையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்படுவதும், அவர் ஒரு கட்சியினரால் தெரிவு செயப்படுவதும் சரி எனக் கருதுகிறீர்களா?

பிரதமர்:- ஜனாதிபதித் தெரிவு பற்றிய அரசமைப்பு ரீதியான கருதுகோளில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. இந்த நிலையில் அரசமைப்பு ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்துவது சகல கட்சிகளையும், நாட்டையும் சார்ந்த விடயமாகும். அரசியல் கட்சிகளும், மக்களும் விரும்பினால் நிச்சயமாக அரசமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும். சிறுபான்மையினரை ஒதுக்கும் நோக்குடன் இந்த ஜனாதிபதித் தெரிவு முறையை மாற்றும் நோக்கம் உருவாகின்றது என்ற கருத்தை எம்மால் ஏற்கமுடியாது நாம் எப்போதும் மாற்றமடையும் சமூகத்திலேயே வாழ்கிறோம்

ஒரு முறைமை பலவீனமான

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
செல்வி தெ. ரஞ்சனாதேவியின் சகோதரனான

### தெ. ரவீந்திரன்

அகால மரணமடைந்ததையிட்டு மனவேதனையில் ஆழ்ந்திருக்கும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

H. N. D. A. 2 ஆம் வருட மாணவர்கள் (பகுதி நேரம்),
யாழ். தொழில் நுட்பக் கல்லூரி.

(29667)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி பொன்னுத்துரை

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி — பொன்னுத்துரை அவர்கள் 27-2-94 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் திருமதி புஷ்பம், மகேஸ்வரி, தனலஷ்சுமி, புவனேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருஞானம், நடேசபிள்ளை, சிறிஸ்கந்தராசா, நீலமோகன் (மலேசியா), கருணரட்ணா (சவுதி), ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக மாசியப்பிட்டி இல்லத்தில் இருந்து விளாவெளி இந்து மயானத்திற்கு இன்று 28-2-94 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நடேசபிள்ளை
(மருமகன்)

மாசியப்பிட்டி சந்தி,
சண்டிலிப்பாய்.

(29673)

### நாகநாதர்பிள்ளை செல்லத்துரை

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 1 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கொட்டடி சிவன் பண்ணை வீதியில் வசித்தவருமாகிய நாகநாதர்பிள்ளை செல்லத்துரை 27-2-94 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற நாகநாதர்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் நடராசா, காலஞ்சென்ற பாலசிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும் சண்முகராசா (மணி), தனபாலசிங்கம் (சந்திரன்), சிவராசமதி, சிவகாமசுந்தரி, செல்வராணி (சுவிஸ்), ஆகியோரின் தந்தையும், நவரெத்தினம் (இ. போ. ச), மணிவாசகம் (பிரபலவர்த்தகர் கொழும்பு), துரைராசா (சுவிஸ்), புஸ்பவதி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இராசம்மா, இரத்தினம், பரநிருபசிங்கம் காலஞ்சென்ற நடராசா, முத்தையர் காலஞ்சென்ற காராளபிள்ளை, காலஞ்சென்ற கனகரெத்தினம் (ஆசிரியர்), ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (28-2-94) பிற்பகல் 4 மணிக்கு இல. 33 சிவன் பண்ணை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
செ. சண்முகராசா
(மகன்)

No. 33 சிவன்பண்ணை வீதி,
கொட்டடி.

(29675)

### திருமதி செல்லம்மா சடையர்

திருமதி செல்லம்மா சடையர் 27-2-94 இல் இறைபதம் அடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு சடையர் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி இரத்தினம் செல்லத்துரை, டாக்டர் வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ச. நாகேந்திரன் (கனடா), ச தேவராஜன் (கனடா), திருமதி சிவமலர் தங்கவேல், திருமதி ஜெயமலர் பாலச்சந்திரன், ச நடராசா (இலங்கை வங்கி), செல்வி ச புஸ்பமலர் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற டாக்டர் தங்கவேல், பாலச்சந்திரன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (28-2-94) முற்பகல் 11.00 மணியளவில் குடும்ப மயானத்தில் நடைபெறும்.

தகவல்;
ச. நடராஜன்
(இலங்கை வங்கி)
(மகன்)

கிளானை,
அல்வாய்.

(29676)

### பண்டிதை தம்பு வேதநாயகி
(வேலணை மேற்கு - நெல்லாவில்)

பண்டிதை தம்பு வேதநாயகி காலமானார். அன்னார் மருதையனார் தம்பு உபாத்தியாரின் மகளும் காலஞ்சென்றவர்களான சௌந்தரநாயகி, யோகம்மா, சிவஞானசப்பந்தர் ஆகியோரின் அருமைத்தங்கையும் யோ செல்லையா, நாகப்மை ஆகியோரின் மைத்துனியும், சச்சிதானந்தம் (கிராம சேவையாளர்) அவர்களின் சிறியதாயாரும் ராதா, கௌரிரயணி, ஆகியோரின் மாமியாரும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்க கிழமை (28-2-94) பி.ப 2 மணியளவில் 22/1, அம்மன் வீதி இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொ கேதாரநாதன்

22/1, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(29671)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

படையினரைப் பயன்படுத்தி

# வாக்குப் பெட்டிகளை நிரப்ப சதித் திட்டம் என்கிறார் சிறிமா

கொழும்பு, பெப். 28

நாளை கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களின் போது இராணுவத்தினரையும் பொலீஸாரையும் பயன்படுத்தி வாக்குப் பெட்டிகளை நிரப்புவதற்கு அரசு சதித்திட்டம் தீட்டியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவியும், ஸ்ரீ. ல. சு. கவின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சுமத்தியிருக்கிறார்.

பி. பி. ஸி சிங்கள சேவை இவ்வாறு அறிவித்தது.

பொலீஸாரும்ரி இராணுவமும் ஆளும் ஐ. தே. கவுக்கு அசாதாரண முறையில் ஒத்துழைப்பு வழங்கி வருவதாக எதிரணிகள் பரவலாகக் குற்றம் சுமத்தி வருகின்றன.

பொலீஸ் அதிகாரிகள் ஐ. தே. கவின் தேர்தல் முகவர்களாகச் செயற்பட்டு வருவதாக முஸ்லிம் காங்கிரஸ் முன்னர் குற்றம் சுமத்தியிருந்தது. அதே குற்றச்சாட்டை சிறிமாவோவும் தற்போது சுமத்தியிருக்கிறார் (உ-6)

## யாழ். குடா நாட்டின்

## சகல வீதிகளையும் திருத்த தேவையான நிதி கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல வீதிகளையும் திருத்துவதற்கான நிதியை வழங்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சு முடிவு செய்துள்ளது.

கடந்த வாரம் கொழும்பில் நடந்த தேசிய புனர்வாழ்வு இணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வீதிகளையும் திருத்துவதற்கான திருத்த மதிப்பீட்டு அறிக்கையை சமர்பிக்குமாறு உடனடியாகக் கோருவது என்றும் அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ-3)

## பாரம்பரிய தாயகம்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவோ பொருத்தமற்றதாகவோ கருதப்பட்டால் அதனை மாற்றுவது தவிர்க்க முடியாதது என்பது எனது கருத்து.

*சிங்களவரின் அதிகாரம்*

கேள்வி: ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர். மொனராகலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் "இந்த நாட்டை ஆளும் அதிகாரம் பெரும்பான்மை இனமக்களின் கைகளிலேயே இருக்கவேண்டும் என" அவர் கூறியுள்ளார். இந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? இது ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய கொள்கையா?

பிரதமர்:- ஜனாதிபதி அண்மையில் கூட்டங்களில் ஆற்றிய உரை மிகவும் விரிவாக பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது. ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மட்டுமல்ல. இந்த நாட்டு மக்கள் அனைவரினதும் தலைவராவார். கடந்த காலங்களில் இந்த நாட்டில் பெரும்பான்மையின மக்களின் தலைமைத்துவமே தொடர்ச்சியாக இருந்து வந்தது. இதன் கருத்து பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை ஆளுகின்றனர் என்பதல்ல. ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்து சிங்கள மக்கள் ஒன்றுபடவேண்டும் என்பதேயல்லாமல் சிறுபான்மையினர் மீது மேலாதிக்கம் செலுத்தவேண்டும் என்பதல்ல

*சிறுபான்மையினர் அடிமைகளா?*

கேள்வி:- பெரும்பான்மையினர் ஆளும் வர்க்கத்தினர் சிறுபான்மையினர் அடிமைகளா?

பிரதமர்:- நான் அப்படிக் கருதவில்லை. இந்த நாட்டில் பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் நீண்ட காலமாகக் கலந்து வாழ்கின்றனர்? சிறுபான்மையினர் மத்தியில் வன்முறைகள் செலுத்தப்பட்ட போது அனைத்துப் பெரும்பான்மையினரும் அதனை ஆதரிக்கவில்லை. வெறும தீயசக்திகளின் செயற்பாட்டினாலேயே நாட்டில் முரண்பாடான நிலை தோன்றியது. நான் மீண்டும் சொல்வது என்னவென்றால் ஜனாதிபதி டி பி விஜேதுங்காவின் பேச்சுக்களை நாம தவறான நோக்கத்துடன் பார்ப்பதே இந்த முரண்பாட்டின் அடிப்படைக் காரணமாகும்.

*மண்ணை உண்பதா*

கேள்வி:- கொழும்பில் இருந்து விநியோகங்கள் இடம் பெறாவிட்டால் வடபகுதியில் உள்ள மக்கள் மண்ணைத் தான் உண்ணவேண்டும் என ஜனாதிபதி அடிக்கடிக் கூறுவது வடபகுதியில் உள்ள தமிழர்களை இழிவுபடுத்துவதாக இருக்காதா? சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் கருணையில் தான் வாழ்கின்றனர் என்பதா இதன் அர்த்தம்?

பிரதமர்:- இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் தேவையான அடிப்படை வசதிகளைக் கொடுப்பதில் எந்த சந்தர்ப்பத்திலும் எமது அரசு பின் நிற்கவில்லை. யுத்த சூழல், வன்முறைகள், அழிவுகளின் மத்தியிலும் நாம் உணவையும், அத்தியாவசியப் பொருள்களையும் அனுப்பி வருகிறோம. இராணுவத்தால் பாதுகாப்புக்காக சுமார் நூறு வகையான பொருள்கள் ... தடைகள் கொண்டுவரப்பட்டன. ஆனால் இப்போது அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இராணுவ ஒத்துழைப்புடன் சுமார் 40 வகையான பொருள்கள் மட்டுமே தடை செய்யப்பட்டுள்ளன.

ஆயுத ரீதியான வன்முறைகள் தோன்றும் போது மட்டுமே உணவு அனுப்பப்படுவதில் தடங்கல் ஏற்பட்டது. ஆனையிறவு வழியாக உணவு அனுப்பும் வசதி இருந்தால் எவ்வகையான கஷ்டமும் இருக்காது. கடல் மார்க்கமாக பெருமளவு செலவுடன் உணவை நாம் தொடர்ந்தும் அனுப்பி வருகிறோம்.

கேள்வி:- ஜனாதிபதி அண்மையில் பாரம்பரிய தாயகம் என்ற கோட்பாட்டை இல்லா தொழிக்கப்போவதாக கூறியுள்ளார். இது ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையா?

பிரதமர்:- ஐக்கிய தேசியக் கட்சி எந்த சந்தர்ப்பத்திலும் பாரம்பரிய தாயகத்தை கோட்பாடு ரீதியாக ஏற்கவில்லை. இந்த நாட்டில் இன வேறுபாடு இன்றி எந்தப் பிரதேசத்திலும் எவரும் வாழலாம் என்பதே எமது அடிப்படைக் கருத்து. இதனையே நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறோம்.

*தொண்டா, செல்லா இருவரும் எமது அமைச்சர்களே*

கேள்வி:- பிரஜா உரிமை வேதனக் கோரிக்கைகள், தோட்ட மக்களின் காணி உரிமைகள் போன்ற பல விடயங்களையும் ஜனாதிபதி கூறி வருகிறார் இந்தக் கூற்றுக்கள் 1993 மே மாதத்தின் முன்னர் இருந்த அரசாங்கத்தின் கொள்கைகளில் இருந்து முரண்படுகின்றன. பெருந்தோட்டத் தமிழர்களின் விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன?

பிரதமர்:- அண்மையில் தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டன. இதன் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் பல திட்டங்களை அமைச்சர் தொண்டமானுடன் கலந்து அரசு மேற்கொண்டு வருகிறது. அரசு எந்த வகையிலும் தோட்டத் தொழிலாளர்களை வேறுபடுத்திப் பார்க்கவில்லை. அவர்களுடைய அடிப்படை உரிமைகளை நாம் படிப்படியாக நிறைவேற்றி வந்துள்ளோம்.

கேள்வி:- இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குள் ஏற்பட்டுள்ள பிளவு தொடர்பாக ஐக்கியதேசியக் கட்சியின் கொள்கை என்ன? இ. தொ. காவில் உள்ள முரண்பட்ட சக்திகளுக்கு ஐக்கியதேசியக் கட்சி ஆதரவளிப்பதாக பரவலாக அபிப்பிராயம் உள்ளது. இது சரியானதா?

பிரதமர்:- எந்த விடயத்தையிட்டும் மக்கள் பல்வேறு விதமாகச் சிந்திப்பார்கள். அவற்றில் உண்மையும் இருக்கும்; பொய்யும் இருக்கும். மக்கள் கூடுதலாகக் கதைக்கிறார்கள் என்பதற்காக நாம் தவறான அபிப்பிராயங்களை உருவாக்கக் கூடாது. அரசாங்கத்தில் தொண்டமானும் செல்லச்சாமியும் அமைச்சர்களாக உள்ளனர். அவர்களிடையே ஏற்படும் முரண்பாடு எம்மிடையே ஏற்படும் முரண்பாடு போன்றது அமைச்சர் தொண்டமான் தனது மக்களை ... (உ-5)

## இன்று இசையாராதனை

யாழ்ப்பாணம், பெப். 28

ஸ்ரீ ராகவேந்திரா சுவாமிகள் மிருதிகா பிருந்தாவனம் நடத்தும் மாதாந்த இசையாராதனை நல்லூர் கோவில் வீதியில் உள்ள பணிமனையில் இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

இசை ஆராதனையில் இசைக்கலைமணி வாசஸ்பதி ரஜீந்திரனின் பாட்டு இடம்பெறும். பக்கவாத்தியக் கலைஞர்களாக வித்துவான் ஆர்.எஸ். கேசவமூர்த்தி (வயலின்), இசைக்கலைமணி க. கண்ணதாசன் (மிருதங்கம்), செல்வன் .க. மயூரன் (தபேலா) ஆகியோர் பங்குபற்றுவர். (உ-5)

ஐ. நா. மனித...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கிய குழு ஒன்று பங்கு பற்றி வருகிறது.

ஸ்ரீலங்கா அரசு இந்த மாநாட்டில் சமர்ப்பித்துள்ள அறிக்கை பல குளறுபடிகளைக் கொண்டிருப்பதாக பிரின்ஸ் குணசேகர தெரிவித்தார்.

சூரியகந்தவில் புதைகுழியிலிருந்து எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டமை—

அது சம்பந்தமான நீதிமன்ற விசாரணைக்குச் சென்ற சட்டத்தரணிகளை நோக்கி துப்பாக்கித் தாக்குதல் நடத்தப்பட்டமை—

டி ஐ.ஜி உடுகம்பொல சம்பந்தமான விவகாரங்கள்—

உட்பட பல விடயங்களை அரசு மறைத்து விட்டதாக பிரின்ஸ் குணசேகரா குற்றஞ் சாட்டினார் (உ-6)

பளையை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டங்கள் வயல்களிலும் வீழ்ந்து வெடித்தன.

ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து சனிக்கிழமை பளைப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. (அ-117)

கிளாலி,...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டது. அதன் பின்னர் சுமார் 10.15 மணியளவில் கடற்பகுதியில் குண்டு வீச்சை ஆரம்பித்தது. றொக்கெட் தாக்குதலையும் நடத்தியது.

அதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு வந்த பிரயாணிகளை ஆலங்கேணி நோக்கி ஏற்றிச்சென்ற படகுகளே கடலில் சென்று கொண்டிருந்தன.

இதேவேளை அக்கரையில் ஆலங்கேணிப் பகுதியிலும் சனிக்கிழமை இரவு 10 மணி அளவில் "புக்காரா" றொக்கெட் தாக்குதலை நடத்தியதாகவும்—

அவற்றில் பல வயல்வெளிகளிலேயே விழுந்து வெடித்ததாகவும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர்.

குண்டு வீச்சு, றொக்கெட் தாக்குதல் என்பன நடந்த சிறிது நேரத்தில் படகுச் சேவை அங்கிருந்து இக்கரை நோக்கி ஆரம்பமாகியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இரவு 10.30 மணியளவில் 'புக்காரா' விமானம் வீசிய குண்டு கிளாலிச் சந்தியில் வீழ்ந்ததால் பல வீடுகள் சேதமாகின.

குண்டு வீச்சுத் தாக்குதலில் வயிற்றில் படுகாயமுற்ற மல்லாகத்தைச் சேர்ந்த எஸ். பஞ்சலிங்கம் (40 வயது) நேற்று அதிகாலை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் அவரது குடல் வெளியே வந்த நிலையில் இருந்தது. (அ-எ-3-6-17-117-15)

## வடமராட்சியில் கடற்படை தாக்குதல்

வல்வெட்டித்துறை, பெப் 28

நேற்று அதிகாலை 4 மணியளவில் காங்கேசன்துறைப் பக்கத்திலிருந்து வந்த கடற்படையின் 'டோரா' கப்பல் ஒன்று தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், சுப்பர்மடம், வடமராட்சிகிழக்கு ஆகிய பகுதிகளை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் சென்றது. (உ-155)


மாணவர்களே! ஆசிரியர்களே!!
பெற்றோர்களே!!!
கல்விமான்களே! தேசப்பற்றுள்ளவர்களே!!

எங்கள் பிள்ளைகளின் கல்வித்தரம்
குறைந்து விட்டதென்று
கவலைப்படுகிறீர்களா?

**இனிமேல் கவலையை விடுங்கள்**



உங்களுக்காகவே உலகளாவிய
பொது அறிவுக் களஞ்சியமாக
**உலக உலா வெளிவருகிறது**

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
* உலக உலாவை *
வாங்கிப் படிப்பதுதான்.

இலகு தமிழில், அழகு நடையில்
**உலக உலா**
உங்கள் கையில்

முந்துங்கள்..............

பெப்ரவரி மாதம்
உலகை வலம் வருவதற்கு

**உலக உலா செயலகம்.**

144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-7287]

## கண்ணீர் அஞ்சலி



### தெய்வேந்திரம் ரவீந்திரன்

தோற்றம்: 11-02-1971
மறைவு: 26-02-1994

நேற்றுவரை எம்முடன் இருந்த
நீ இன்று காற்றாய் கரைவாயென
நாம் கனவிலும் நினைத்ததில்லை
தொடரும் காலமெல்லாம்
எம்முடன் வாழும் உன் நினைவுகள்.

நண்பர்கள்:
வீ விஜித்தன், ஜோ செல்வராஜ்,
ம குயின்ரன்.

(29672)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மயில்வாகனம்

சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு ஸ்ரீ அம்பாள் ஸ்ரோஸ் உரிமையாளர் கந்தையா மயில்வாகனம் காலமானார்.

அன்னார் புத்திசிகாமணியின் அன்புக் கணவரும், ஸ்ரீ ஸ்கந்தராசா (கனடா), மகாதேவி, புஸ்பராணி (கனடா), புஸ்பராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வனிதா (கனடா), உருத்திரன், சகாதேவன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் — காலஞ்சென்ற நாகம்மா, நடராசா, இராசம்மா, நமசிவாயம், சிவப்பிரகாசம், தவேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (28-2-94) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பில்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் நண்பர்கள், உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உருத்திரன்
(மருமகன்)

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.

(29678)

### இராமலிங்கம் கனகசபாபதிச் செட்டியார்

இராமலிங்கம் கனகசபாபதிச் செட்டியார் காலமாகிவிட்டார்.

அவர் சிதம்பரவல்லியின் அன்புக் கணவரும், தனலட்சுமி, சுந்தரகணேசன், வரகுகநேசன், விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணமுத்து, குககுமாரராஜா, சரஸ்வதி, தில்லைநாயகி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற திருமதி கனகசபை சோமசுந்தரம், மற்றும் திருமதி பரமேஸ்வரி இராசேந்திரா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21, செட்டித்தெரு நல்லூரில் இன்றுதிங்கட்கிழமை 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

தகவல்:
சுந்தரகணேசன்
(மகன்)

21, செட்டித்தெரு,
நல்லூர்.

(29677)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org